1970 ஆகஸ்ட் 28]

*105 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government is aware of the Plan of the Union Ministry of Railways to run a Rajdhani Express;

(b) whether the views of this Government were sought for this scheme; and

(c) if not, what action the Government propose to take thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தென் இந்திய ரெயில்வேயில் ராஜதானி கடுவிசை ரயில் வண்டியைப் போன்ற வண்டி ஒன்றை விடுவதற்கான செயற்குறிப்புகள் எவையும் தற்போது இல்லை என்று தென் இந்திய ரெயில்வேயின் பொது நிர்வாகி தெரிவித்துள்ளார்.

(இ) & (உ) :—இவ் விஞக்களுக்கு இடமில்லை.

மீன் வளர்ப்புப் பண்ணைகள்

*94 விஞ.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பு திட்டம் இணைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், காந்தி கிராமம் மூலம் ஏற்படுத்தப்பட்ட பண்ணைகள் எத்தனை?

(உ) அதற்கு கொடுக்கப்பட்ட வாகனங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) காந்தி கிராமத்திலுள்ள நிறுவனத்தின் மூலம் இத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனினும் காந்தி கிராமம் அமைந்துள்ள ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் செய்முறை ஊட்டச்சத்து திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பு பண்ணைகள் ஏழு தொடங்கப்பட்டன.

(உ) மீன் பண்ணைத் திட்டங்களுக்கென தனியாக மோட்டார் வண்டி எதுவும் ஒதுக்கப்படவில்லை. எனினும் இந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு செய்முறை ஊட்டச் சத்து திட்டத்தின்கீழ் "யுனி செப்" நிறுவனத்தின் மோட்டார் வண்டி ஒன்று ஒதுக்கப்பட்டது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, இந்த ஊட்ட சத்து திட்டத்தின் கீழ், மீன் வளர்ப்பு பல இடங்களில் நடைபெறுகிறது. ஆனல், இந்த இடத்தில் இதனல் அதிக மீன் வளர்ச்சி ஏற்படுவதில்லை. பணமும் விரயம் ஆகிறது. ஆகவே, மீன் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடத்தில் இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த அந்த இடங்களில் இருக்கும் தன்மைகளை ஆய்ந்து வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்படு கின்றன. ஆனல் அந்த இடத்தில் வறட்சி ஏற்பட்டதால், மீன்